London Ambulance Service NHS Trust

# நல்வரவு

(Tamil)

நல்வரவு

தமிழ்

**எங்களைப் பற்றி**

- நாங்கள், நோயாளிகள் பெறும்போது இலவசமாகக் கிடைக்கக்கூடிய கவனிப்பையும், சிகிச்சையையும் வழங்கும் உலகிலேயே மிகப்பெரிய ஆம்புலன்ஸ் சேவைதாரர்கள்.
- நாங்கள் லண்டனிலுள்ள தேசிய உடல்நலச் சேவையின் முக்கியப் பொறுப்புடையவர்கள், மேலும் எங்களுக்கு இரண்டு முக்கியப் பணிகள் உண்டு – உடல் நலம் குன்றிய அல்லது காயம்பட்ட மக்களிடமிருந்து வரக்கூடிய அவசர அழைப்புகளை ஏற்றுச் செயல்படுவது மற்றும் மருத்துவமனை முன்பதிவுகளுக்காக நோயாளிகள் மருத்துவமனைக்கு வரவும், போகவும் உதவுவது.
- 7.5 மில்லியன்களுக்கும் மேல் மக்கள் தொகையுள்ள சுமார் 620 சதுர மைல்கள் (1606 சதுர கிலோமீட்டர்கள்) பரப்புள்ள பகுதிக்கு நாங்கள் சேவை புரிகிறோம்.
- ஏப்ரல் 2007 மற்றும் மார்ச் 2008க்கும் இடைப்பட்ட காலத்தில் நாங்கள் சுமார் 1.4 மில்லியன் அவசர அழைப்புகளைக் கையாண்டு, 945,000க்கும் மேற்பட்ட அவசர நிகழ்வுகளைச் சென்று கவனித்தோம்.
- எங்களிடம் 4,1000க்கும் மேற்பட்ட பணியாளர்கள் உள்ளனர்.

---

**எப்பொழுது 999-ஐ அழைக்க வேண்டும்**

**யாராவது ஒருவர் தீவிரமாக உடல்நலம் குன்றி அல்லது காயம்பட்டு, உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்தால் நீங்கள் எப்பொழுதும் 999-ஐ அழைக்க வேண்டும்.**

மருத்துவ அவசரங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும் (ஆனால் இவை மட்டுமே அல்ல):

- நெஞ்சு வலி
- மூச்சு விடுவதில் சிரமம்
- நினைவிழப்பு
- தீவிர இரத்த இழப்பு
- தீவிரக் காயங்கள் அல்லது சுடுநீரால் ஆன புண்
- மூச்சுதிணறல்
- வலிப்பு / அதிர்ச்சி
- நீரில் அடித்துச் செல்லப்படுதல்
- தீவிர ஒவ்வாமை விளைவுகள்.

அது உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய ஒரு நிகழ்வாக இல்லாமல் இருந்து, உங்களுக்கு அல்லது உங்களுக்கு உடன் இருக்கும் நபருக்கு உடனடி மருத்துவ உதவி தேவைப்படவில்லை எனில், நீங்கள் 999-ஐ அழைக்கும் முன்பு பிற தெரிவுகளையும் பரிசீலனை செய்யவும் :

- உங்களையோ, நோயாளியையே இல்லத்திலேயே கவனித்துக் கொள்ளவும். உங்களால் இல்லத்தில் இருக்கமுடியவில்லை என்றால் உங்கள் குடும்பத்தினரோ, நண்பர்களோ உதவ முடியுமா எனப் பாருங்கள்.
- உங்களுடைய உள்ளூர் மருந்தாளுநரிடம் ஆலோசிக்கவும்.
- உங்களுடைய பொது மருத்துவரைச் சென்று பார்க்கவும் அல்லது தொடர்பு கொள்ளவும்.

- என் எச் எஸ் டைரக்ட் -ஐ 0845 4647 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும் அல்லது www.nhsdirect.nhs.uk என்ற முகவரியில் அவர்களது இணையதளத்தைப் பார்வையிடவும்
- உங்கள் உள்ளூர் ஏ & ஈ துறை, வாக்-இன் மையம் அல்லது சிறு காயங்கள் பிரிவுக்குச் செல்ல நீங்களே ஏற்பாடு செய்துகொள்ளவும். (ஆம்புலன்ஸில் வருவது விரைவாக சிகிச்சை கிடைக்கச் செய்யும் என அர்த்தமாகாது).

---

**நீங்கள் 999-ஐ அழைக்கும்போது என்ன நிகழ்கிறது**

நீங்கள் 999-ஐ அழைக்கும்போது உங்களுக்கு எந்த அவசரச் சேவை தேவைப்படுகிறது என ஒரு ஆப்பரேட்டர் கேட்பார்.

மருத்துவ அவசரத்தின்போது ஆம்புலன்ஸ் சேவை வேண்டுமெனக் கேளுங்கள் அதைத் தொடர்ந்து எங்களது தொலைபேசி வழிப் பணியாளர்கள் ஒருவருக்குத் தொடர்பளிக்கப்படுவீர்கள்.

அழைக்கும்போது கீழ்வரும் விவரங்கள் உங்களிடம் இருக்கத் தேவைப்படும்:

- அஞ்சல் குறியீடு உட்பட, நீங்கள் இருக்கும் இடத்தின் முகவரி.
- நீங்கள் எந்த எண்ணிலிருந்து அழைக்கிறீர்கள் என்ற விவரம்.
- என்ன நடந்தது என்ற விவரம்.

நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பது தெரிந்தவுடன், எங்களால் உங்களுக்கு உதவியை அனுப்ப இயலும்.

கீழ்வருவனவற்றை உள்ளிட்ட சில கூடுதல் தகவல்களைத் தருமாறும் நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுவீர்கள் :

- நோயாளியின் வயது, பாலினம் மற்றும் மருத்துவ வரலாறு ;
- நோயாளி நினைவுடன் இருக்கிறாரா, மூச்சு விடுகிறாரா மேலும் ஏதாவது இரத்தக்கசிவு அல்லது நெஞ்சுவலி இருக்கிறதா என்ற விவரம் ; மற்றும்
- காயம் மற்றும் அது எப்படி ஏற்பட்டது என்பது குறித்த விவரங்கள்.

இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிப்பது எங்களைத் தாமதப்படுத்தாது, மாறாக எங்கள் பணியாளர்கள் வந்து கொண்டிருக்கும் சமயத்தில், நீங்கள் செய்ய வேண்டிய முக்கியமான முதலுதவி குறித்து அறிவுறுத்த எங்களுக்கு உதவும்.

இந்தக் கூடுதல் தகவல்கள் உங்களுக்கு மிகவும் பொருத்தமான உதவியை நாங்கள் அனுப்புவதை உறுதி செய்யவும் எங்களுக்கு உதவும்.

உதவி வந்து சேரும் முன்னர், கீழ்வருவனவற்றைச் செய்வதன் மூலமாக நீங்கள் எங்களுக்கு உதவலாம் :

- நீங்கள் தெருவில் இருந்தால், உதவி வந்து சேரும் வரை நோயாளியுடனேயே இருக்கவும்.
- நோயாளியின் நிலை மாறினால், எங்களை மீண்டும் தொடர்பு கொள்ளவும்.
- நீங்கள் இருக்கும் இடம் மாறினால், எங்களை மீண்டும் தொடர்பு கொள்ளவும்.
- நீங்கள் இல்லத்திலிருந்தோ, பணியிடத்திலிருந்தோ அழைத்தால், யாராவது ஒருவரை கதவுகளைத் திறந்து, ஆம்புலன்ஸ் பணியாளர்கள் எங்கே தேவை என தெரிவிக்குமாறு கூறவும்.
- செல்லப் பிராணிகள் ஏதாவது இருந்தால், கட்டி வைக்கவும்.
- உங்களால் முடிந்தால், நோயாளியுடைய பொது மருத்துவரின் விவரங்களை எழுதி, அவர்கள் ஏதாவது மருந்து எடுத்துக்கொண்டிருந்தால் அவற்றைச் சேகரிக்கவும்.
- நோயாளிக்கு ஏதாவது ஒவ்வாமைகள் இருந்தால், எங்களிடம் தெரிவிக்கவும்.

- அமைதியாக இருக்கவும் - எங்கள் பணியாளர்கள் உதவி செய்வதற்காகவே அங்கே உள்ளார்கள். வன்முறை அல்லது மிரட்டுவது போன்ற நடத்தைக்கு அவர்களை இலக்காக்குவது பொறுத்துக் கொள்ளப்படமாட்டாது மற்றும் நோயாளிக்கு உதவி கிடைப்பதைத் தாமதிக்கச் செய்யும்.

எதிர்காலத்தில் எங்களுக்கு உதவ, நீங்கள் இன்றே பல காரியங்களைச் செய்யலாம் :

- உங்கள் வீட்டின் எண், சாலையிலிருந்து தெரிகிறதா என்பதைச் சோதிக்கவும்.
- நீங்கள் ஒரு எஸ்டேட்டில் வசித்துவந்தால், அவசரச் சேவைகளுக்கு வழிகாட்ட தெளிவான குறியீடு உள்ளதா, எனவும், லிப்ட் கள் அனைத்தும் நன்கு இயங்குகின்றனவா என்பதையும் சரிபார்க்கவும்.

---

**யார் உங்களுக்குச் சிகிச்சையளிப்பார்கள்?**

எங்களுக்குப் போதுமான தகவல்கள் கிடைத்தவுடன், உங்களுக்கு அவசர மருத்துவ சிகிச்சை தேவை என நாங்கள் நினைத்தால், நாங்கள் உதவியை அனுப்பி வைப்போம்.

நாங்கள் பல்வேறு மாறுபட்ட வழிகளில் செயல்படுவோம்.

<u>உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் ஆபத்துக்கள்</u>

இரண்டு நபர்களுடன் கூடிய ஒரு ஆம்புலனஸ் வரும் என்றே மக்கள் பெரும்பாலும் எதிர்பார்ப்பார்கள், ஆனால் கார், மோட்டார் பைக் அல்லது மிதிவண்டியில் தனியாக வரும் எங்கள் பணியாளர்களாலும் உங்களுக்குச் சிகிச்சையளிக்க முடியும்.

அது ஒரு அவசர நிலையாக இருந்தால், ஆம்புலன்ஸ் பணியாளர்கள், உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய நலக்குறைபாடுகள் மற்றும் காயங்களைக் கையாள்வதில், நன்கு பயிற்சியளிக்கப்பட்ட நிபுணர்கள் அல்லது மருத்துவ உதவியாளர்களாக இருப்பார்கள்.

மிகவும் ஆபத்தான மருத்துவ அவசரங்களின்போது செய்யப்படத் தேவைப்படக்கூடிய இன்றியமையாத செயல்முறைகளை மேற்கொள்ளவும் மருத்துவ உதவியாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டிருக்கும். இத்தகைய செயல்முறைகள் இன்டியூபேசன் (ஒரு நோயாளி மூச்சுவிட உதவ சுவாசக்குழாய்க்குள் ஒரு குழாய் நுழைக்கப்படுவது) மற்றும் நீடில் செஸ்ட் டீகம்ப்ரசன்ஸ் (அதிகரிக்கும் காற்று அழுத்தத்தை வெளியேற்ற மார்புக்குள் ஒரு ஊசியைச் நுழைத்தல்) ஆகியவற்றை உள்ளடக்கும்.

மிகவும் ஆபத்தான மருத்துவ அவசரங்களின்போது, லண்டன் ஏர் ஆம்புலன்சிலிருந்து வரும் மருத்துவக்குழுவாலும் உங்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படலாம். ஹெலிகாப்ட்ரிலுள்ள மருத்துவக் குழுவானது, தீவிரமான விபத்துக் காயங்களை உடைய நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதில் திறனுடைய ஒரு மருத்துவர் மற்றும் மருத்துவ உதவியாளரை உள்ளடக்கும்.

நீங்கள் லண்டனின் வெளிப்புற பகுதிகளில் வசிப்பவராக இருந்தால், அங்கு வரக்கூடிய முதல் நபர், ஆம்புலன்ஸ் வந்துகொண்டிருக்கும்போது, தங்களின் உள்ளூர் சமூகத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு உயிர்காக்கும் சிகிச்சையளிக்க பயிற்சி அளிக்கப்பட்ட பொதுமக்களில் ஒருவரான சமூகப் பணியாளராக இருக்கக்கூடும்.

<u>உடனடி மருத்துவ உதவி</u>

அவரச சிகிச்சை மருத்துவர்கள் என்பவர்கள், சிக்கலான ஆனால் மிகவும் அவரசமில்லாத நலக்குறைபாடுகளுக்கு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க முற்படும், மேம்பட்ட மருத்துவத்திறன்கள் உடைய மருத்துவ உதவியாளர்கள் ஆவார்கள். அவர்கள் காரில் வருவார்கள் மற்றும் பொதுவாகத் தனியாக பணிபுரிவார்கள். அவர்களாலும் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் அவசரங்களுக்கு சிகிச்சையளிக்க இயலும்.

<u>தொலைபேசி வழி ஆலோசனை</u>

உடனடி சிகிச்சை தேவைப்படும் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் அவசரமாக அது இல்லை எனில், எங்களது மருத்துவ ஆலோசகர்களில் ஒருவர் உங்களைத் தொடர்பு கொள்ளக்கூடும். அவர்கள் மருத்துவ ரீதியாகப் பயிற்சி அளிக்கப்பட்டவர்கள். அவர்கள் உங்களுடைய நிலை அல்லது நீங்கள் யாருக்காக அழைக்கிறீர்களோ அவரின் நிலை குறித்து உங்களிடம் மேலும் கேள்விகள் கேட்பார்கள். அவர்கள் சில மருத்துவ ஆலோசனைகளை வழங்கக்கூடும். இருந்தபோதிலும் மேலும் கேள்விகள் கேட்கும்போது, சிகிச்சை தேவையென அவர்கள் முடிவு செய்தால், கூடிய விரைவில் உதவி அனுப்பப்பட ஏற்பாடு செய்வார்கள்.

<u>தீவிரம் குறைவான சூழ்நிலைகள்</u>

உங்களுடைய நலக்குறைபாடு அல்லது காயத்தின் தீவிரம் குறைவாக இருந்து, ஆனால் நீங்கள் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படவேண்டி இருந்தால், நாங்கள் எங்கள் ஏ & ஈ உதவிக் குழுக்களில் ஒன்றை அனுப்பக்கூடும். அவர்களும் நோயாளிகளிடம் ஒரு ஆம்புலன்ஸிலேயே செல்வார்கள். ஆனால் ஒரு மருத்துவ உதவியாளர் அல்லது அவசர கால மருத்துவ நிபுணரின் மருத்துவத் திறன்களும், ஒளிரும் நீல விளக்குகளுடன் ஆம்புலன்சும் தேவைப்படாத நோயாளிகளையே அவர்கள் கையாளுவார்கள்.

---

**அவசர இதய சிகிச்சை**

இதயத்திற்கு உடனடி அவசர சிகிச்சை தேவைப்படும் இரண்டு நிலைகள் உள்ளன. அவை; ஹார்ட் அட்டாக் மற்றும் இதயச் செயலிழப்பு. இவற்றில் ஏதாவது ஒன்றால் பாதிக்கப்பட்ட நபருக்கு உடனடியாக மருத்துவ உதவி கிடைக்கவில்லை என்றால், அவர்கள் உயிரிழக்கக்கூடும்.

ஹார்ட் அட்டாக் மற்றும் இதயச் செயலிழப்பு இரண்டும் ஒன்றல்ல.

இரத்தக்குழாயில் அடைப்பு ஏற்பட்டு, இதயத்திற்குச் செல்லும் இரத்தத்தின் ஓட்டம் தடைபட்டால் ஹார்ட் அட்டாக் ஏற்படுகிறது. மற்ற அறிகுறிகள் இருந்தபோதிலும், ஹார்ட் அட்டாக்கின் மிகப் பொதுவான அறிகுறி நெஞ்சுவலியாகும். சிகிச்சையளிக்கப்படாவிட்டால் அது இதயத் துடிப்பு நிற்பதை உண்டாக்கக்கூடிய இதயச் செயலிழப்புக்கு வழிவகுக்கும்.

**இந்த இரண்டு நிலைகளில் ஏதாவது ஒன்றால் யாராவது ஒருவர் பாதிக்கப்பட்டால், நீங்கள் ஒரு ஆம்புலன்ஸ் வேண்டி உடனடியாக 999-க்கு அழைக்க வேண்டும்.**

**ஹார்ட் அட்டாக் சிகிச்சை**

ஒரு நோயாளிக்குப் பொதுவகை ஹார்ட் அட்டாக் ஏற்பட்டு இருப்பதை எங்கள் பணியாளர் நிர்ணயம் செய்தால், அவர்கள் நோயாளியை லண்டனிலுள்ள எட்டு ஹார்ட் அட்டாக் மையங்களில் ஒன்றிற்கு அழைத்துச் செல்வார்கள். அங்கே அவர்களுக்கு சிறப்பு மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும். இதற்கு எங்கள் பணியாளர்கள் நோயாளியின் உள்ளூர் மருத்துவமனையைப் புறக்கணிக்கக்கூடும் என்றும் அர்த்தம் கொள்ளலாம்.

ஹார்ட் அட்டாக்கின் மிகவும் பொதுவான அறிகுறிகளாவன :

- நடு மார்பில் வலி, அது கைகள், கழுத்து அல்லது தாடைக்குப் பரவுதல்.
- நடு மார்பில் வலியுடன் உடல்நலமில்லாத உணர்வு அல்லது வியர்த்துப் போதல்.
- நடுமார்பில் வலியுடன் மூச்சுவிடச் சிரமம் இருப்பதுபோல உணர்தல்.

அறிகுறிகள் மாறலாம் மற்றும் சிலர் கீழ்வருவனவற்றில் ஏதாவது ஒன்றை உணரக்கூடும்:

- மார்பில் லேசான வலி, பிசைவது அல்லது கனமாக தோன்றுவது போன்ற ஒரு உணர்வு.
- நீங்கள் உடல்நலக்குறைவாக உணரச் செய்யும் விதமாக இதயத்தில் லேசான அசௌகரியமான உணர்வு.

- மார்பில் உள்ள வலி, முதுகு அல்லது வயிற்றுப்பகுதிக்குப் பரவலாம்.
- மோசமான ஜீரணக்கோளாறு போல உணரச் செய்யும் மார்பு வலி.
- மார்பு வலியுடன் தலை லேசானதுபோல் அல்லது தலைசுற்றல் உணர்வு.

இந்த வலியானது ஐந்து நிமிடங்கள் முதல் பலமணிநேரங்கள் வரை நீடிக்கலாம். சுற்றிலும் நடப்பது, நீங்கள் இருக்கும் நிலையை மாற்றுதல் அல்லது ஓய்வெடுத்தல், வலியை நிறுத்தாது அல்லது குறைக்கச் செய்யாது. வலி நிலையாக இருக்கக்கூடும் அல்லது வந்துபோகக்கூடும். அது அழுத்தம், பிழிவது அல்லது முழுவதும் வலிப்பது போன்று தோன்றக்கூடும்.

**நீங்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவர் ஹார்ட் அட்டாக்கிற்கு உள்ளாகி இருப்பதாக நீங்கள் எண்ணினால் நீங்கள் ஒரு ஆம்புலன்ஸ் வேண்டி உடனடியாக 999-க்கு அழைக்க வேண்டும்**

ஆம்புலன்ஸ் குழு என்ன செய்யும்

உங்களுக்கு ஹார்ட் அட்டாக் ஏற்பட்டுள்ளது என நாங்கள் நம்பினால், கூடியவரை விரைவாக உங்களை வந்தடைய நாங்கள் முயற்சிப்போம்.

எங்கள் பணியாளர்கள் வந்து சேர்ந்தவுடன், உங்களைச் சோதித்து உங்கள் வலியைக் குறைக்க ஒரு சில மருந்துகளைக் கொடுக்கக்கூடும்.

அடைபட்ட உங்கள் இரத்த நாளத்தின் வழியாக இரத்தம் எளிதில் பாயுமாறு அவர்கள் உங்களுக்கு ஆஸ்பிரின் கொடுக்கக்கூடும். மேலும், அவர்கள் உங்கள் இதயச் தசையின் இறுக்கம் குறையச் செய்ய உங்கள் நாக்கின் அடியில் கிளிசரால் ட்ரை நைட்ரேட் அடிக்கக்கூடும்.

12 – முனை எலக்ட்ரோ கார்டியோ கிராம் (ஈசிஜி) எனப்படும், ஆம்புலன்ஸில் இருக்கும் ஒரு சாதனத்தைப் பயன்படுத்தி ஹார்ட் அட்டாக்-ஐ உறுதிப்படுத்த எங்கள் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

உங்கள் இதயத்தின் செயல்பாட்டைப் பதிவு செய்யும் இந்த சாதனத்தைப் பயன்படுத்தி, பெரும்பாலும் எஸ் டி - எலிவேட்டட் மயோ கார்டியல் இன்பார்க்சன் எனப்படும் பொதுவகை ஹார்ட் அட்டாக் உங்களுக்கு ஏற்பட்டுள்ளதா என எங்கள் பணியாளர்கள் உறுதி செய்வார்கள்.

உங்களுக்கு ஹார்ட் அட்டாக் ஏற்பட்டுள்ளது என நாங்கள் கண்டறிந்தால் சிறப்பு மருத்துவமனைச் சிகிச்சைக்காக நாங்கள் உங்களை உடனடியாக அழைத்துச் செல்வோம்.

மருத்துவமனையில் உங்களுக்கான சிகிச்சை

ஹார்ட் அட்டாக் மையத்திலுள்ள ஒரு வல்லுநர் குழு உங்களுக்குப் பல்வேறு சோதனைகள் செய்து பார்ப்பார்கள். நீங்கள் உறுதியாக ஹார்ட் அட்டாக்கினால் பாதிக்கப்பட்டிருந்தால், பிரைமரி ஆஞ்சியோபிளாஸ்டி எனப்படும் அவசர இதய அறுவைச் சிகிச்சைக்காக நீங்கள் அனுமதிக்கப்படுவீர்கள்.

ஆஞ்சியோபிளாஸ்டி எனப்படுவது, இரத்த நாளத்திற்குள் ஒரு கதீட்டர் நுழைக்கப்பட்டு, பின்னர் அடைப்பைத் திறப்பதற்காக ஒரு சிறிய பலூனில் காற்று நிரப்பப்படும் ஒரு செயல்முறை ஆகும். இரத்த நாளம் திறந்தவாறு இருக்கச் செய்ய ஸ்டெண்ட் எனப்படும் ஒரு சிறிய குழாய் நுழைக்கப்படும். ஹார்ட் அட்டாக்கிற்கு சிறந்த மருத்துவ சிகிச்சையாக ஆஞ்சியேபிளாஸ்டி கண்டறியப்பட்டுள்ளது. மேலும் 95 சதவீத நிகழ்வுகளில் இதயத்தில் இரத்தஓட்டம் வெற்றிகரமாக சீரமைக்கப்பட்டுள்ளது.

**இதயச் செயலிழப்புகள்**

யாராவது ஒருவர் நிலைகுலைந்து விழுந்து, மூச்சு விடுவதை நிறுத்தினால், அவர்களின் இதயம், உடம்பு முழுவதற்கும் இரத்தத்தைச் செலுத்துவதை நிறுத்திவிட்டது என அர்த்தம். இது இதயச் செயலிழப்பு எனப்படும்.

இதயச் செயலிழப்பு ஏற்பட்ட ஒருவர் மருத்துவரீதியாக இறந்துவிடுகிறார். எனவே, கூடியவரை விரைவாக உயிர்காக்கும் உதவி வழங்கப்பட வேண்டும்.

**யாராவது ஒருவருக்கு இதயச் செயலிழப்பு ஏற்பட்டால் ஒரு ஆம்புலன்ஸ் வேண்டி உடனடியாக 999-க்கு அழைக்கவும்.**

ஒருவரின் உயிரைக் காப்பதில் ஐந்து படிநிலைகள் உள்ளன. இவை உயிர் வாழ்வதற்கான தொடர் எனப்படுகின்றன.

**1. விரைவாகக் கண்டறிதல்**

- இதயச் செயலிழப்பின் அறிகுறிகளைக் கண்டறிய இயலுவது முக்கியம்.

**2. விரைவான அணுகுதல்**

- ஒருவருக்கு இதயச் செயலிழப்பு ஏற்பட்டுள்ளதை நீங்கள் கண்டறிந்தால் நீங்களாக அவருக்கு உதவி செய்யத்தொடங்கும் முன்பாகவே, ஒரு ஆம்புலன்ஸ் வேண்டி உடனடியாக 999-க்கு அழைக்க வேண்டும்.
- வேறு யாராவது அருகில் இருந்தால், நீங்கள் நோயாளியைக் கவனித்துக்கொண்டு அவர்களை ஆம்புலன்ஸை அழைக்கச் செய்யுங்கள்.

**3. உயிருக்கான விரைவான அடிப்படை உதவி**

- ஆம்புலன்ஸ் வந்துகொண்டிருக்கும்போது, இதயச் செயலிழப்பு ஏற்பட்ட ஒருவருக்கு சிறப்பான முறையில் மார்பு அழுத்தங்களை மேற்கொள்வது உடல் முழுவதும் இரத்த ஓட்டம் தொடரச் செய்யும்.
- “உயிருக்கான முத்தம்” தருவது இரத்தத்தில் ஆக்சிஜன் அளவைத் தக்க வைக்கும்.
- இந்தச் செயல், கார்டியோ பல்மனரி ரிசஸ்சிடேஷன் (சிபிஆர்) எனப்படும். மேலும், இது இதயச் செயலிழப்பால் பாதிக்கப்பட்ட ஒருவர் உயிர் வாழ்வதற்கான மிகச்சிறந்த வாய்ப்பைத் தருகிறது.
- இந்தத் திறன்களை நீங்கள் கற்றுக்கொள்ளலாம், மேலும் உதவி வந்து கொண்டிருக்கும்போது நீங்கள் என்ன செய்ய வேண்டும் என எங்கள் பணியாளர்கள் தொலைபேசி வழியாக உங்களுக்கு தெரிவிப்பார்கள்.

**4. விரைவான டீபைப்ரிலேஷன்**

- ஒரு டீஃபைப்ரிலேட்டர் அல்லது “அதிர்வு – பெட்டி” என்பது ஒருவருக்கு இதயச் செயலிழப்பு ஏற்பட்டிருக்கும்போது, அதற்கு அதிர்வு கொடுத்து மீண்டும் துடிக்கச் செய்யப் பயன்படுத்தப்படும் ஒரு சாதனம். ஒருவருக்கு இதயச் செயலிழப்பு ஏற்பட்டால், கூடியவரை விரைவாக இது பயன்படுத்தப்பட வேண்டும்.
- ஆம்புலன்ஸ் பணியாளர்கள் அனைவரும் டீஃபைப்ரிலேட்டரை கொண்டுவருவார்கள். மேலும், ஆம்புலன்ஸ் வந்துகொண்டிருக்கும்போது, பயிற்சி பெற்ற பணியாளர்களால் பயன்படுத்தத்தக்க முறையில் லண்டனில் உள்ள பொது இடங்களில் 450 பெட்டிக்கும் மேல் உள்ளன.

**5. விரைவான மேம்பட்ட உயிர் ஆதாரம்**

- ஆம்புலன்ஸ் பணியாளர்கள் இதயச் செயலிழப்பால் பாதிக்கப்பட்ட ஒருவரிடம் வந்து சேர்ந்தவுடன், அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் முன்பு, சிறப்புத் திறன்களையும், சாதனங்களையும் பயன்படுத்தி அவரது உயிரை மீட்கத் தொடர்ந்து முயற்சிப்பார்கள்.
- யாராவது ஒருவருக்கு இதயச் செயலிழப்பு ஏற்பட்டிருப்பதை நீங்கள் கண்டால், அவர்கள் இந்த முன்னேறிய சிகிச்சையைப் பெறும் வகையில் நீங்கள் உடனடியாக ஒரு ஆம்புலன்ஸை அழைப்பது முக்கியம்.